அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

ந.க.எண்.014894 / பி1 / 2021 நாள் : 17.11.2021

ஐயா / அம்மையீர்,

பொருள் : செப்டம்பர் 2021, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு – தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

நடைபெற்ற செப்டம்பர் 2021, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்தான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது விளம்பரம் அல்ல எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு :
செய்திக்குறிப்பு

நகல்
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
} தகவலுக்காவும், உரிய நடவடிக்கைக்காகவும்.

# <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>
## <u>பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு செப்டம்பர் – 2021</u>
## <u>தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்தான செய்திக்குறிப்பு</u>

நடைபெற்ற, செப்டம்பர் 2021, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (தட்கல் தனித்தேர்வர்கள் உட்பட) தேர்வு முடிவினை, **19.11.2021–ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி** முதல் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

அரசாணை (டி) எண்.24, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள்.11.09.2021 மற்றும் அரசாணை (2டி) எண்.24, பள்ளிக்கல்வி (அ.தே)த் துறை, நாள்.16.09.2021–ன்படி செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வெழுத விண்ணப்பித்த மாற்றுத்திறனாளித் தனித்தேர்வர்களுக்கு தேர்ச்சி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத் திறனாளி தனித்தேர்வர்களும் மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றி, மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்துக்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

<u>இணையதளத்தில் மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்வதற்கான வழிமுறைகள் :</u>

1. தனித்தேர்வர்கள் வருகிற **19.11.2021 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி** முதல் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன்,

   **Notification < SSLC Examination< Provisional Mark Sheet**
   **SSLC Result – Sep 2021**

   எனத் தோன்றும் வாசகத்தினை "Click" செய்தால், தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து, தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

<u>மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:</u>

செப்டம்பர் 2021 தேர்வுக்கான மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **22.11.2021 மற்றும் 23.11.2021** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

<u>மறுகூட்டல் **(Retotal) கட்டணம்** :</u>

பாடம்
(ஒவ்வொன்றிற்கும்) ரூ.205/–

அரசுத் தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் மறுகூட்டல் முடிவுகள் குறித்து அறிவிப்பு வெளியிடப்படும்.

<u>முக்கிய குறிப்பு:</u>

செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுக்கான மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தனித் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு செல்லும்பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து, போதிய சமூக இடைவெளியினைக் கடைபிடித்தல் வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

<u>இடம் :</u> சென்னை–600 006.
<u>நாள் :</u> 17.11.2021